Date. 25.06.2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

OS.19/2024

**வா.சா. 2**

**பெயர். திரு.ஐதர் அலி**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிராமணம் செய்விக்கப்பட்டார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு பூர்விக ஊர் சேலம். நான் ஐந்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு நன்றாக படிக்க தெரியும் என்றால் படிக்கத் தெரியாது. தமிழ் படிக்கத் தெரியாது. வழக்கு வாதி எதற்கு போட்டுள்ளார் என்று எனக்கு தெரியும். எதற்காக வாதி வழக்கு போட்டுள்ளார் என்றால் அவரது கணவர் இறந்ததற்காக வழக்கு போட்டுள்ளார். முதன்மை பிரமாண வாக்கு மூலத்தில் என்ன போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால், நான் வாதியின் திருமணத்தின் போது சாட்சி கையெழுத்து போட்டது குறித்து சொல்லி தட்டச்சு செய்துள்ளார்கள். பிரமாண வாக்குமூல விவரங்களை கொஞ்சம் கொஞ்சம் எனக்கு படித்துக் காட்டினார்கள். எனக்கு பிரமாண வாக்குமூல விவரங்களை வாதி சுமையா பானு தான் படித்துக் காண்பித்தார் என்றால் சரிதான். அதன்பிறகு தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். வாதியின் அப்பா எனக்கு அண்ணன் முறையாக வேண்டும். தூரத்து சொந்தம். சேந்தங்குடி மசூதிக்கு மாப்பிள்ளை வீட்டார் சார்பாக எத்தனை பேர் வந்தார்கள் என்றால், சுமார் ஐந்து அல்லது ஆறு பேர் வந்திருப்பார்கள். அவர் வந்த ஐந்து பேரில் எத்தனை பேர் மாப்பிள்ளை சார்பாக கையெழுத்து போட்டார்கள் என்றால், நான் போட்டேன். மாப்பிள்ளை வீட்டு சார்பாக நான் ஒருவர்தான் கையெழுத்து போட்டேன். நசீர் அகமது திருமணத்திற்கு தனியாக தான் வந்தார். அதனால் அவர் சார்பில் நான் கையெழுத்து போட்டேன். சுமையா பானுவின் உடன் பிறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர் என்றால், அவருடன் பிறந்தவர்கள் மொத்தம் மூன்று பேர். அவர்களின் பெயர் சொல்ல முடியுமா? என்றால், சுமையா பானு,

ஷபியா பானு, மற்றொருவர் பெயர் சரியாக ஞாபகம் இல்லை. அந்த கல்யாணத்தில் சாட்சி கையெழுத்து செய்தவர்களில் எத்தனை பேர் உயிருடன் உள்ளார்கள் என்றால், எல்லோரும் உயிருடன் தான் உள்ளார்கள். நசீர் அகமது மட்டும்தான் இறந்துவிட்டார். நான் ஒருவர்தான் மாப்பிள்ளை சார்பாக கையெழுத்து போட்டேன் வேறு யாரும் கையெழுத்து போடவில்லை. பெண் வீட்டு சார்பாக 2,3 பேர் கையெழுத்து போட்டார்கள். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. **(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை பகுதியாக நிறுத்தி வைக்கப்பட்டு ஒத்திவைக்கப்படுகிறது)**